# முரசொலி

மக்களின் நான்கு    விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 177 ஆங்கிரச வைகாசி 09 (22 05 1992) வெள்ளி


## மர்ம விமான இரைச்சல்!

நேற்று காலை 10-30 மணியளவில் பாரிய இரைச்சலுடன் மர்மமான விமானம் ஒன்று யாழ்குடா வானில் பறந்து சென்றதை அவதானிக்க முடிந்தது. இந்த விமானத்தின் இரைச்சலை கேட்டு வீதியால் சென்ற மக்கள் பலர் பீதியடைந்து ஓடி ஒளிந்தனர். பலர் பதுங்கு குழிகளுக்குள் ஒளிந்தனர். இந்திய அரசாங்கம் விமானம் மூலம் உணவுப் பொதிகளை 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் குடாநாட்டில் போடும் போது அந்த விமானங்களுக்கு பாதுகாப்பாக வந்த மிராச் விமானத்தின் இரைச்சல் சத்தம் போல் இந்த விமானத்தின் சத்தமும் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இந்த விமானம் பலாலி சூழல் பகுதியை வட்டமிட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (06, 47. 07)

# புலிகளைத் தடைசெய்ய ஸ்ரீலங்கா அரசு மறுப்பு!

## இந்தியாவின் தடைப் பிரகடனத்தின் பின்னர் ஸ்ரீலங்கா விடுத்த முதல் அறிவிப்பு

விடுதலைப்புலிகளைத் தடைசெய்ய ஸ்ரீலங்கா அரசு மறுத்துவிட்டது; இதை நேற்று பாராளுமன்றத்தில் பிரதமர் டி. பி. விஜேதுங்க அறிவித்தார்.

நேற்று பாராளுமன்றம் கூடிய போது எதிர்க்கட்சிகள் இந்தியா புலிகளை தடை செய்ததை சுட்டிக்காட்டி ஸ்ரீலங்கா அரசும் அதைப் பின்பற்றி புலிகளை தடைசெய்யுமாறு வற்புறுத்தி பெரும் கூச்சலிட்டு வாக்குவாதம் புரிந்தனர். விவாதத்தின் முடிவில் உரையாற்றிய பிரதமர் விஜேதுங்க புலிகளை தடைசெய்யுமாறு எதிர்க்கட்சிகள் எழுப்பிய கோரிக்கையை நிராகரித்தார்.

அரசு அவசரப்பட்டு உடனடி நடவடிக்கை எதையும் மேற்கொள்ள எண்ணவில்லை நாம் சரியான முறையிலான — 04 ஆம் பக்கம் பார்க்க

### வீரச்சாவு

நேற்று மணலாறில் நடைபெற்ற தாக்குதலில் கப்டன் குட்டிமணி (த. உதயகுமார் - கருவாக்குடியிருப்பு) லெப். செம்கோல் (த. சிவகுமார் - ஆனைக்கோட்டை) வீரச்சாவு எய்தினர்.

### மண்டைதீவிலிருந்து ஷெல் தாக்குதல்

மண்டைதீவு முகாமிலிருந்து நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ். கரையோரப் பகுதியை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். சுமார் மூன்று ஷெல்கள் பண்ணை கோட்டைப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. மாலை 5 மணியளவிலும் ஒரு ஷெல் ஏவப்பட்டது. 07, 47

### விடுதலை

நீர்கொழும்பில் கைதான தமிழ் இளைஞர்கள் 23பேரில் 8பேர் விடுதலை செய்யப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. 14

### நக்சலைட்டுக்கு தடை

ராஜீவ் காந்தி நினைவுதினத்தை முன்னிட்டு நேற்று ஆந்திரமாநிலம் அரசு மாநிலத்தின் நக்சலைட்டுகளான மக்கள் போராயுட்க்குழு என்ற தீவிரவாத அமைப்பை தடைசெய்வதாக அறிவித்தது.

இவ்வமைப்பிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாக இந்திய அரசு குற்றஞ்சாட்டி வருவது தெரிந்ததே

### சுதந்திரக்கட்சி சத்தியாக்கிரகம்

பாராளுமன்ற வாசலில் நேற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பிக்கள் சத்தியாக்கிரகம் செய்தனர்

எதிர்க்கட்சியினரின் பிரச்சினைகள் அரசாங்கத்தால் மறுக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த சத்தியாக்கிரகம் நடைபெற்றது

# மணலாறு அதிரடித்தாக்கு காவலரண் வீழ்ச்சி

மணலாறில் நேற்று அதிகாலை 5, 50 மணியளவில் புலிகள் நடத்திய இந் திடீர் அதிரடியில் படையினரின் காவலரண் ஒன்று கைப்பற்றப்பட்டது இதில் இருபடையினர் பலியாகினர்.

கிலோமீற்றர் இடைவெளியில் இராணுவ முகாமிற்கும் முந்திரிகைக்குளம் இராணுவ முகாமிற்கும் இடையில் அமைந்திருந்த காவலரண் ஒன்றே புலிகளினால் கைப்பற்றப்பட்டதாகும்

இத்தாக்குதலில் காவலரணிலிருந்து படையினரின் ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டது

இத்தாக்குதலைத்தொடர்ந்து முந்திரிகைக்குளம் இராணுவமுகாமிலிருந்து சரமாரியான ஷெல் தாக்குதல் நடைபெற்றது

# மன்னார் அதிரடித்தாக்கு 6 படையினர் பலி

மன்னார் நறுவிலிக் கிராம முகாமருகே நேற்று காலை 5-30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 6 படையினர் பலியாகினர்.

நறுவிலி மாதிரிக் கிராம முகாமிலிருந்து வெளியேறிய 15 பேரடங்கிய இராணுவ அணி முகாமிலிருந்து 200 யார் தூரத்தில் வைத்து புலிகளின் அதிரடிக்கு இலக்கானது. இதில் காயமடைந்த 9 படையினர் முகாமிற்கு திரும்பியோடினர்.

## இந்தியத் தூதுவர் ஜா பேட்டி பாராளுமன்றிலும் எதிரொலிப்பு

அண்மையில் இந்தியத்தூதுவர் ஜா கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு புலிகளின் தடை ... தடை ஓர் அடையாள நடவடிக்கை என ஜா பேட்டியில் குறிப்பிட்டது குறித்து ...

## மன்னார், மணலாறில் கைப்பற்றிய ஆயுதங்கள்

நேற்றுக்காலை மன்னார், மணலாறும் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மன்னாரில்:

- மினி மினி எல். எம். ஜி- 1
- ரி- 56 துப்பாக்கிகள் - 04
- மகஸீன்கள் - 12
- ரி - 81 துப்பாக்கி - 01
- மகஸீன்கள் - 02
- ...

மணலாறில்:

- ஏ. கே. எல். எம். ஜி. - 1
- ஏ. கே. எல். எம். ஜி. ரக மகஸீன் - 01
- ரி 56 துப்பாக்கி - 01
- ரி. 56 மகஸீன் - 03
- ஐ. எல் ரவை லிங் குடன் - 500
- ஐ எம். ரவை - 86
- ஜே ஆர் கைக்குண்டு - 03

## ★ அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி பிரபாகரன் தாயாருடன் பேச அனுரா தயாராக இருந்தார்

நாட்டின் சமாதானத்துக்காகவும், அமைதிக்காகவும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனோடு மட்டுமல்ல அவரது தாயாரோடு ... வெளியான செய்தியை பாராளுமன்றத்தில் நேற்று உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி வாசித்தார்.

## பாராளுமன்றிலும் எதிரொலிப்பு

அண்மையில் இந்தியத் தூதுவர் ஜா கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு புலிகளின் தடை குறித்து அளித்த பேட்டி தொடர்பான விவகாரம் பாராளுமன்றத்தில் நேற்று எழுப்பப்பட்டது.

அப்போது புலிகள் மீதான தடை ஓர் அடையாள நடவடிக்கை என ஜா பேட்டியில் குறிப்பிட்டது குறித்து கருத்து வெளியிட்ட பிரதமர் விஜேதுங்க இது அடையாளம் போதல்ல. தற்போது மேற்கொள்ளப்பட்டிருப்பது மாற

— 4 ஆம் பக்கம் பார்க்க

- மினி மினி எம். எம். ஜி - 1
- டி - 56 துப்பாக்கிகள் - 04
- மகஸீன்கள் - 12
- டி - 81 துப்பாக்கி - 01
- மகஸீன்கள் - 02
- 5 56 ரவை - 1050
- ஐ. எம். ரவைகள் - 400
- ஜே. ஆர். குண்டுகள் - 09
- சேல்சர்கள் - 06
- 4 சோடி சப்பாத்துகள்
- டி. 56 மகஸீன் - 03
- ஐ. எம். ரவை விசி குடன் - 500
- ஐ எம். ரவை - 86
- ஜே ஆர். கைக்குண்டு - 03
- ரவை தடுப்பு அங்கி - 1
- செல்மெற் - 03
- சப்பாத்து - 1 சோடி
- மின் பெல்ட் - 02
- இந் பாக் - 01

நாட்டின் சமாதானத்துக்காகவும், அமைதிக்காகவும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனோடு மட்டுமல்ல அரசு தரப்பாரோடு பேசவும் தயார் என அனுரா பண்டாரநாயக்கா கூறியதாக சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தியை பாராளுமன்றத்தில் நேற்று உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி வாசித்தார்.

தமிழ் மக்களைக் கொன்று இப்பிரச்சினையைத் தீர்க்க

— 04 ஆம் பக்கம் பார்க்க

● வொஷிங்டனில் அமைச்சர் ரணில்

## நாடுகடத்தல் விவகாரம் சட்டப்படியே அணுகப்படும்

சார்க் மற்றும் பொதுநலவாய நாடுகளிடையிலான நாடுகடத்தல் சட்டத்தின் கீழ் ஸ்ரீலங்கா அரசு நடந்து கொள்ளும் இதனடிப்படையிலேயே ராஜீவ் கொலை சதித்திட்டத்திலும் தமிழ்ப் போராளிகள் விடயத்திலும் அரசு கையாளும் என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

| 4 ஆம் பக்கம் பார்க்க

★ சபையில் பிரதமர்

## புலிகளுடன் பேச ஸ்ரீமாவோ ஆலோசனை கூறியிருந்தார்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்த வேண்டும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆலோசனை கூறியிருந்தார்

இவ்வாறு பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜேதுங்க நேற்று பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்ட விவாதத்தின் போது கூறினார்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ராஜீவ் நினைவுத்தூபி எழுப்ப முடியாத நிலை

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட ஸ்ரீபெரம்புதூர் மைதானத்தில் அவரின் நினைவாக நினைவுத்தூபி அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

இந்த மைதானம் கோயில் ஒன்றிற்கு சொந்தமானது என்பதால் அங்கு நினைவுச் சின்னம் எழுப்ப கோயில் நிர்வாகம் அனுமதி மறுத்து வருகிறது

இதனால் நினைவுச் சின்னம் எழுப்ப நேற்று பிரதமர் நரசிம்மராவ் அதற்கு அடிக்கல்லை நாட்ட முடியாமற் போனது

நினைவுச் சின்னம் எழுப்ப மாநில அரசின் முயற்சிகளும் பலனளிக்கவில்லை

[illegible]
சேவை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
ஆனால் இலங்கைக்கு நிர்வாக சேவையினருக்

செல்லவேண்டும் என்று கல்விச் சேவைக் குழுவின் செயலாளர் சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார். 15

களை ஏற்றிவரும் பணி ஜூலை 2ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.
தினமும் 4 தடவைகள் விதம் வாரம் மொத்தம் 24

இதுவரை 4351 பேர் விமானமூலம் சென்னையிலிருந்து திருமலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

## அகதிமுகாமில் கைதான ஐவர் மீதும் குற்றப்பத்திரிகை

சென்னையிலுள்ள அகதி முகாமொன்றில் வைத்துக் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட ஐவர் மீதும் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

ரி. விஜயானந்தன், பி. சிவரூபன், சண்முக வடிவேலு, காந்தி, செல்வலட்சுமி ஆகியோரே இந்த ஐவருமாவர்.

இவர்களையும் சேர்த்து ராஜீவ் கொலைவழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுபவர்களின் தொகை 27 ஆக உயர்கிறது.

இதேவேளை விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனை நாடுகடத்துமாறு இந்தியா இலங்கையைக் கேட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்தியொன்று தெரிவிக்கிறது.

## ஆசியில் ஜப்பானின் 12 கொள்வனவு நிலையங்கள்

தாராளமாக்கப்பட்ட மாட்டிறைச்சிக் கொள்வனவில் ஜப்பான் அவுஸ்திரேலியாவில் 12 நிலையங்களை திறந்துள்ளது.

1983 ஆம் ஆண்டுக் 75 சதவீதமாக இருந்த இறக்குமதி வரி தற்போது 50 சத வீதமாகக் குறைக்கப்பட்டதனை அடுத்து ஜப்பானில் இறைச்சியின் தேவை மும்மடங்காகியது. விலைக்குறைவின் எதிரொலியாகவே இந்நிலை உருவானது.

இத்தேவையை நிவர்த்தி செய்ய ஜப்பான் அவுஸ்திரேலியாவிலேயே பண்ணைகளுடன் தொடர்பை ஏற்படுத்தி மேற்படி நிலையங்களை அமைத்துள்ளது.

களும், விடுதலைப் புலிகள் கவிஞர் முன்னணி யாழ் மாவட்டப் பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி அவர்களும் ஏற்றுவார்கள்.

வரவேற்பு நிகழ்வை யாழ் மாவட்டக் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. [illegible] அவர்களும், வெளியீட்டுரையை விடுதலைப் புலிகள் கலை; பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்களும் ஆற்றுவார்கள்.

இதனைத் தொடர்ந்து 'விழுதுகளின் பாடல்கள்' ஒலிப்பதிவு நாடாவை உருவாக்கிய கலைஞர்களுக்கு பரிசளிக்கும் நிகழ்வு இடம்பெறும், கலைஞர்களுக்கான பரிசில்களை யாழ் மாவட்டச் சிறப்புத் தளபதி திரு. தமிழ்ச்செல்வன்

இவ் விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் விடுதலைப் புலிகளின் பண்பாட்டுக் கழகம் அழைக்கின்றது

## இலங்கரத்ன மரணமானார்

1970 ஆம் ஆண்டு உருவான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டரசில் வர்த்தக அமைச்சராக இருந்த ரி. பி. இலங்கரத்ன காலமானார்.

இவர் 1947இல் முதலில் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியிருந்தார். எழுதுவினைஞர் சங்கத்தலைவராக முன்னிருந்த இவர் சிங்கள நாடகமொன்றிலும் நடித்துள்ளார்.

